මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම් කාර්යාලය, අංක 02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : LAE/2025/09** **2025.03.11**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025

### அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமித்தல்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 89 ஆம் பிரிவின்படி பெயர் குறித்த நியமனம் கோரும் காலப்பகுதி ஆரம்பிக்க குறைந்தபட்சம் எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆகையால், 2025.03.03 ஆம் திகதி பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட 336 உள்ளூர் அதிகார சபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமிக்கும் கடிதங்கள் 2005.03.14 ஆம் திகதி மு.ப. 8.30 மணிக்கு முன்னர் அந்தந்த உள்ளூர் அதிகார சபை தெரிவத்தாட்சி அலுவலருக்கு (மாவட்ட பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்) வழங்கப்பட வேண்டுமென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சுயேச்சைக் குழுக்கள் தொடர்பிலாயின், குறித்த குழுத் தலைவரினால் வைப்புப் பணம் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் வேட்பாளர்களில் யாதேனும் ஒருவரை அக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராக நியமிக்க முடியும்.

2025 மார்ச் மாதம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை (போயா தினம்) அரசாங்க விடுமுறை தினமொன்றாக இருந்தபோதும், தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகமும் அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களும் திறந்துவைக்கப்பட்டுள்ளன என்பதை அறிவிக்கின்றேன்.

**ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)